ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2147/42 - 2019 ඔක්තෝබර් මස 29 වැනි අඟහරුවාදා - 2019.10.29

2147/42 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 29 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எமது இல.: GODS/LND/05/ACQ/30.

காணி அமைச்சின் கோவை இலக்கம்: LD/05/2005/E/129.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், கொடகவெல பிரதேச செயலாளர் பிரிவில், மெத பத்துவ சிறு பிரிவில், கொடக்காவலை கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள நில அளவையாளரினால் தயார் செய்யப்பட்ட இ. கி. எ. 615 ஐக் கொண்ட எல்லையின் மேலதிக இல. 7, தாள் இல. 7 இல் துண்டு இல. 344 என கூறப்பட்ட கீழே குறிப்பிடப் பட்டுள்ள எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணித் துண்டு.

**1. துண்டு இல. 344**

காணியின் பெயர்: கொடக்கும்புர, வெடக்கய்யார, மெதகேல்ல, வரலேகும்புர; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: அரசு; விஸ்தீரணம்: 0.3107 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 27 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கொடக்கவலை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்

அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம்



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

ஆண்டு திசெம்பர் மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

டீ. பீ. ஜீ. ரேணுகா,
பிரதேச செயலாளர்,
கொடக்காவலை.

பிரதேச செயலகம்,
கொடக்காவலை,
2019, ஒற்றோபர் 24.

11 - 999

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: HIK/DS/LND/04/02/50.

காணி மற்றும் பா. மறுசீரமைப்பு அமைச்சின் குறிப்பு இலக்கம்: 4-3/15/2015/VE/157.

2018.03.07 ஆம் திகதி வெளியிடப்பட்ட 2061/32 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விஷேட வர்த்தமானிப் பத்திரத்தின் A1 பக்கத்தில் பிரகடனப்படுத்தப்பட்ட 7 ஆவது பிரிவின் கீழான விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள, பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டு உள்ள காணி மற்றும் அதற்கு உட்பட்டவைகள் தொடர்பாக விபரிக்கப் பட்டுள்ள, இரண்டாரம் பந்தியில் காணியின் விஸ்தீரணம் 0.04443 ஹெக்டயார் என்பதற்குப் பதிலாக 0.4443 ஹெக்டயார் எனத் திருத்தப்பட வேண்டும் என்பதை இத்தால் மூலம் பிரகடனப்படுத்து கிறேன்.

ஏ. எம். ஏ. யூ. ஜீ. காரியவசம்,
பிரதேச செயலாளர்,
ஹிக்கடுவை.

11 - 1000